HOTEL GNANAMS
Clean Comfortable Rooms
50/- to 200/-
A C and Non A/C
BEER GARDEN
BEER 30/ V.S O.A. 7/50
OLD ARRACK 6/50
Also:
CHINESE RESTAURANT
1st FLOOR

...LUR BRANCH
MUNICIPAL COUNCIL
JAFFNA

Registered as a Newspaper

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ.1/-

பாதுகாப்பான ரம்மியமான சூழலில் குளிரூட்டப்பட்ட, சாதாரண அறைகள்
உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி சௌகரியங்கள்
சைவ உணவு வகைகள்
மதுபான வகைகள்
யாவும் உண்டு

ஹொட்டேல் ஞானம்ஸ்
299, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 22082

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ வைகாசி மீ 23 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரம்ழான் பிறை 27 (06-06 1986) UTHAYAN- A LIVELY TAMIL DAILY கதிர்: 171

நேற்று நாச்சிமார் கோவிலடியிலிருந்து ஆரம்பமான பேரணியில் கலந்துகொண்ட மாணவ, மாணவியர்

கிளிநொச்சி குண்டுவீச்சில்

யாழ். வந்த உணவு முத்திரைகள் நாசம்!

இரண்டு சாரதிகள் பலி

அரச அதிபரும் அதிகாரிகளும் மயிரிழையில் தப்பினர்கள்

- அலுவலகச் செய்தியாளர்: கே. ஆர் -

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான உணவு முத்திரை நேற்று தீக்கிரையாகி நாசமானது.

உணவு முத்திரைகளை ஏற்றிக்கொண்டு வந்த வாகனம், கிளிநொச்சியில் நடந்த குண்டு வீச்சில் அகப்பட்டுத் தீப்பிடித்தது.

லொறியைச் செலுத்தி வந்த சாரதியும், உதவிக்கு வந்த சாரதியும் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

அதில் கூடவந்த யாழ் அரசாங்க அதிபரும் மற்றும் நான்கு உயர் அதிகாரிகளும் மயிரிழையில் தப்பினர்.

இச்சம்பவம்பற்றிஅறிய வருவதாவது;-

யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தேவையான பல லட்சம் ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளையும் யாழ் செயலகத்திற்குத் தேவையான சில ஆவணங்களையும் ஏற்றிக்கொண்டு வாகனம் ஒன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோககி வந்துகொண்டிருந்தது.

பிரஸ்தாப வாகனம் யாழ் நகரைச் சேர்ந்த 'வீரா ரான்ஸ்போட்' நிறுவனத்திற்குச்சொந்தமானது எனத் தெரியவந்தது.

இதே லொறியில் யாழ் அரசாங்க அதிபரும் இரண்டு கணக்காளர்களும்

(4ஆம் பக்கம் பார்க்க)

காயம் அடைந்தோர் காடுகளில் வைத்தியம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

நேற்றும் நேற்று முன்தினமும் கிளிநொச்சியில் நடைபெற்ற சிப்பாய்கள்—போராளிகள் மோதல்களின்போது காயமடைந்த எவரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவங்களின்போது காயமடைந்த அநேகம் பேர் காடுகளிலும், அயற்கிராமங்களிலும் வைத்து முதலுதவிச் சிகிச்சைக்கும் கை வைத்தியச் சிகிச்சைக்கும் உட்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அருகே இராணுவ —பொலீஸ் கூட்டு முகாம் இருப்பதே காயமடைந்தவர்கள், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படாததற்குக் காரணம்.

எனினும் படுகாயமடைந்த சில பொது மக்கள் இளைஞர்களின் உதவியுடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறது (உ-10)

கிளிநொச்சியில்— 2ஆவது நாளாக கடும் சண்டை

'ஷெல்' வானத் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 6

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாக போராளிகள் -சிப்பாய்கள் கடும்சண்டை தொடர்ந்து நடந்தது.

கிளிநொச்சி கூட்டுமுகாமைவிட்டு நேற்றுக்காலை வெளியேறிய சிப்பாய்கள் திருநகர் பகுதிவரைச் சென்றனர்.

வழியில் போராளிகள் அவர்கள்மீது தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து சிப்பாய்கள் முகாமுக்குத் திரும்பினர்.

இதன்பின்னர் முகாம்பகுதியில் மோதல் நிகழ்ந்தது.

முகாமிலிருந்து ஷெல் குண்டுகள் தீர்க்கப்பட்டன. வானத் தாக்குதலும் இடம்பெற்றது.

பல வீடுகள் சேதமடைந்தன. கடை ஒன்றும், இரண்டு வீடுகளும் தீக்கிரையாகின

நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்ற மோதல்களில் இரண்டு வயதுக் குழந்தை, பன்னிரண்டு வயதுச் சிறுவர் உட்பட பத்துக்கும் அதிகமான தமிழ் பொதுமக்கள் சொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. முப்பதுபேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் உயிரிழந்த இரண்டு பேரின் சடலங்கள் திருநகரில்உள்ளபேக்கரி ஒன்றில் கிடந்ததாகவும்—

மற்றெரு சிறுவனின் சடலம் சிப்பாய்களினால் எடுத்துச் செல்லப்பட

(4 ஆம் பக்கம் பார்க்க)

காங்கேசனிலிருந்து புறப்பட்ட கப்பல் எங்கே?

இடைநடுவில் வெடித்துச் சிதறியதா?

கொழும்பு, ஜூன் 6

சிமெந்து ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டதாகக் கூறப்படும் தாய்வான் நாட்டுக் கப்பல் ஒன்று காணமற் போய்விட்டதாகக் கூறப்படுகிறது.

இடை நடுவில் குண்டு வெடிப்பினுல் இந்தக் கப்பல் சிதறியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கப்பல் கொழும்புத் துறைமுகம் வந்தவுடன் வெடிக்கக் கூடியதாகக் கப்பலில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து கப்பலைத் தேடும் முயற்சியை பாதுகாப்புப்படையினர் மேற்கொண்டனர் ஆனல் கப்பலைக் கண்டுபிடிக்க முடியாதுபோய்விட்டது

இதனிடையில் கப்பல் கொழும்புத் துறைமுகம் வந்தவுடன் சோதனையிடவும் குண்டைக்கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யவும் ராணுவபிரிவு ஒன்று துறைமுகத்தில் நேற்று காத்துக்கொண்டு இருந்ததாகவும் கொழும்பில் இருந்து செய்திகள் கிடைத்துள்ளன,

கப்பல் துறைமுகத்துக்கு வராமற்போகவே கப்பலைத் தேடும் பணி மேற்கொள்ளப்பட்டது.

கப்பலின் பெயர் "சிஹை ஹொங் 2" கப்டன் ஓர் இந்தியர் தூத்துக்குடி வாசி. ஏனைய மாலுமிகள் இலங்கையர்

இச் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பு, திருகோணமலைத் துறைமுகங்கள் உஷார்ப் படுத்தப்பட்டுள்ளன .(உ-எ 2)

செங்கலடி ஆஸ்பத்திரியில்

துப்பாக்கிச் சூடு! இளைஞர் பலி!!

டாக்டர் காயம்

மட்டக்களப்பு, ஜூன் 6

செங்கலடி அரசினர் வைத்தியசாலையில் நேற்று மாலை நடந்த துப்பாக்கிப் பிரயோகம், தாக்குதலைத் தொடர்ந்து, வைத்தியசாலை மூடப்பட்டது. நோயாளிகள் வெளியேறி விட்டனர்

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு இளைஞர் உயிரிழந்தார். அதைத் தொடர்ந்து வைத்தியசாலை பொறுப்பதிகாரி தாக்கப்பட்டார்.

இது பற்றிக் கூறப்படுவதாவது;

செங்கலடி வீதியால் சிப்பாய்கள் ரோந்து வந்துகொண்டிருந்தனர்.

அவர்களைக் கண்டு இளைஞர் ஒருவர் ஓடத் தொடங்கினர். சிப்பாய்கள் சுட்டனர். சூட்டையும் வாங்கிக்கொண்டு இளைஞர் ஓடி வந்து வைத்தியசாலை வளவில் இருந்த பற்றைக்குள் பதுங்கிக் கொண்டார்.

சிப்பாய்கள் வைத்தியசாலை வளவுக்குள் வைத்து பற்றைக்குள் பதுங்கிய இளைஞன் மீது சுட்டனர். இளைஞன் அந்த இடத்திலேயே

(4ம் பக்கம் பார்க்க)

2,300 தமிழர் தடுப்பு முகாம்களில்

கொழும்பு, ஜூன் 6

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சுமார் 2,300 தமிழர்கள் சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

தடுப்பு முகாம்களில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று யாழ்நகரில்

ஆயிரக்கணக்கானோர் பங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 6

வடக்கில் நடைபெறும் அரச படைகளின் தாக்குதல்களைக் கண்டித்து நேற்று யாழ் நகரில் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தினர்.

இந்தப் பேரணியைத் தமிழ் மக்கள் ஒடுக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

உரும்பராயிலிருந்து 'ரெஸோவின்' ஊர்வலம் ஆரம்பமாகும் முன் சிவகுமாரன் சிலைக்கு முன்னுல் அவரின் தந்தை மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தும்போது எடுக்கப்பட்ட படம்.

தொலைத்தொடர்புத் திணைக்களத்தில

உயிரை பணயம் வைக்கும் ஊழியர்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம்தொலைத்தொடர்பு சேவை முற்ருக ஸ்தம்பிதம் அடையாமல் இருப்பதற்குத் தேவையான அவசர நடவடிக்கைகளை யாழ் தொலைத்தொடர்பு திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் உயிரைப்பணயம் வைத்து மேற்கொண்டு வருகின்றனர்.

தினமும் மூன்று மணித்தியாலம் தொலைத்தொடர்புத் திணைக்கள அலுவலகத்துக்கு இந்த ஊழியர்கள் சென்று தொலைபேசிச் சேவையை சீர்குலையாமல் பராமரிப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர்.

அந்த 'மூன்று மணித்தியாலங்களும்' உயிரைப் பணயம் வைத்துக் கொண்டுதான் நாம் பணியாற்றுகின்ருேம் — இப்படி திணைக்கள ஊழியர் தெரிவித்தனர்.

இப்படி பணியாற்ருவிட்டால் தொலைபேசிச் சேவையே இதுவரை முற்ருக ஸ்தம்பித்திருக்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

பொலீஸ் உத்தியோ

(4 ம் பக்கம் பார்க்க)

சிறிமாவோ நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூன் 6

சீன சென்றிருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த புதன்கிழமை நாடு திரும்பினர்.

சீன ஜனதிபதியின் அழைப்பைஏற்று திருமதி பண்டாரநாயக்கா சீன சென்றிருந்தார் (உ-எ-2)

சுபநேரம்

6 — 6 — 1986
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
5·25 முதல் 7·[illegible] வரை
ராகுகாலம்:
10.22 முதல்11.52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நோன்பு நேரம்

சஹார்	4·18
மக்ரிப்	6 [illegible]

நடுவழியில் இறக்கப்பட்ட 45 தமிழ்ப் பயணிகள் எங்கே?

கொலையுண்டிருக்கலாம் என அச்சம்

திருகோணமலை, ஜூன்6

திருகோணமலைப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினுல் வான், பஸ்களில் பிரயாணம் செய்த சுமார் 45 தமிழ்ப் பயணிகளின் நிலை என்ன என்பது இன்னும் தெரியவில்லை,

அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சீருடையினர் அவர்களை வாகனங்களில் இருந்து இறக்கி ஊர்காவல் படையினரிடம் ஒப்படைத்தனராம் அதன் பின்னர் அவர்கள் காட்டுக்குள் கொண்டு செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்குப்பிறகு அந்தத் தமிழ்ப் பயணிகளுக்கு என்ன நடந்தது என்பதைக்கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது.

ஆண்டாங்குளம், மிஹிந்தபுர பகுதிகளில் புதன்கிழமை பிற்பகல் நடந்த சம்பவத்தில் 16 சிங்களவர்கள் கொல்லப்பட்டனர்.

அவர்களின் சடலங்கள் குளம் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு பௌத்த பிக்குவையும் காணவில்லை என்று கூறப்படுகின்றது.

பௌத்த கோயில் ஒன்றும் சேதமாக்கப்பட்டது. இரண்டு லொறிகளும் வீடுகள் சிலவும் எரிக்கப்பட்டன.

இறந்தவர்களில் இரண்டு பேர் ஆண்கள். 8 யுவதிகள். 3 குழந்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)



கப்பல் மர்மம் மட்டும் இல்லை, உப்பிடி இன்னும் எத்தனை மர்மங்கள் நடக்கப்போகுதோ ஆருக்குத் தெரியும் ..!

அரச அலுவலகங்கள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

நேற்று நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தால் அரச அலுவலகங்கள். திணைக்களங்கள் என்பன ஸ்தம்பித்தன.

நேற்றுக் காலை அரச ஊழியர்களின் வரவு குறைவாகவே காணப்பட்டது

இதனல் பிற்பகலுடன் பல திணைக்களங்கள் மூடப்பட்டு விட்டன (உ-5

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

பலாலியிலிருந்து வெளியேறியோர்

மாற்று உடை, பங்கீட்டு உணவு இன்றி பலர் கஷ்டம்

பலாலி, ஜூன்.6

வயாவிளான் மகா வித்தியாலய இராணுவ முகாம் அமைக்கப்பட்ட நாளில், தமது உடுதுணியுடன் மட்டும் தமது குடிசைகளை விட்டு அயல் கிராமங்களுக்கு இடம் பெயர்ந்தவர் மாற்று உடை, பங்கீட்டு உணவு இன்றி மிகவும் கஷ்டப் படுகின்றனர்.

குப்பிளான், ஈவினை, உரும்பராய், அச்சுவேலி-செல்வநாயகபுரம் போன்ற பகுதிகளில் தற்காலிகமாக புகலிடமடைந்த இவர்கள் தொடர்ந்து தங்க இடமின்றி அலைகின்றனர்.

பங்கீட்டு உணவு முத்திரை, அடையாள கார்ட் என்பனவற்றைக் கூடப்பறி கொடுத்த இவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் பாதிக்கப்பட்டவர்களுக்கான உணவுப்பங்கீடு ('றைஸ்றேசன்') கூட கிடைப்பதாயில்லை என்று கூறப்படுகின்றது

இப்படியானவர்களுக்கு வருமானத்துக்கான தொழில் தேடிக் கொடுக்கவும், இருப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கவும் சில இயக்கங்கள் முன்வந்துள்ளன.

இதற்காக இயக்கங்கள் மக்களின் ஒத்துழைப்பை வேண்டியுள்ளன.

உடுவில் பகுதியில்

சட்டவிரோத மின்பாவனையை நிறுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 6

உடுவில் பகுதியில் சட்டவிரோத மின்பாவனையை நிறுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும்படி யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உடுவில் உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இ. கனேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உடுவில் உப அலுவலகப் பிரதேசத்தில் உள்ள கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர்கள், சனசமூக நிலையத் தலைவர்கள் மற்றும் குழுக்களின் தலைவர்களுக்கு இந்த வேண்டுகோள் அனுப்பப்பட்டுள்ளது.

பாவனையாளர்களுக்குச் சிறந்த மின் விநியோக வசதி செய்து கொடுக்குமுகமாக இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் புதிய உப மின் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

இணுவில் வன்னியசிங்கம் வீதியில் உள்ள மின் நிலையத்தை கூடிய சக்தி வாய்ந்த மின் விநியோக நிலையமாக மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

எனவே நிரந்தரமின் பாவனையாளருக்கு சிறந்த மின் விநியோகத்தை உறுதிப் படுத்தும்பொருட்டு சகல சட்ட விரோத மின்பாவனைகளையும் அகற்றுவதற்கு ஒத்துழைப்பு அளியுங்கள்.

இப்படி அந்த வேண்டுகோளில் கூறப்பட்டு உள்ளது. (-எ)

பிறந்த நாள் வாழ்த்து

செல்வி பாமினி

திருநெல்வேலி காளி கோவிலடியைச் சேர்ந்த தணிகாசலம் பவளராணி தம்பதிகளின் புதல்வி பாமினி நாளை (7-6-86) தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

நடிகர் முரளிக்கு தந்தையின் அறிவுரை

கன்னடப் படவுலகின் பிரபல டைரக்டர் கே. சித்தலிங்கய்யா. யார் இந்த சித்தலிங்கய்யா. நடிகர் முரளியின் தந்தை தான் அவர்.

திரையுலகை நன்கு புரிந்து கொண்டுள்ள அவர், மகன் முரளிக்கு சில அறிவுரைகளைக் கூறுகிறார்

உன்னுடன் நான் எப்பொழுதும் இருந்து நல்லது, கெட்டதைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. எனவே நல்லது, கெட்டது எது என்பதை நீயாகவே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

ஆரோக்கியமான மனமும் உடலும் இருந்தால் படவுலகில் எதையும் சாதிக்கலாம்.

சினிமா கவர்ச்சியான உலகம் நமக்கு கவர்ச்சி இருக்கும் வரையில் இங்கே இருக்கலாம்.

கவர்ச்சி போய்விட்டால்...?

'அண்ணே...? என்பவர்கள் 'தம்பி' என்று சொல்லி... 'டேய்' என்னும் நிலைமைக்குக் கொண்டு வந்து நிறுத்திவிடும் தொழில் இது.

படப்பிடிப்பில் உனக்காக யாரும் காத்திருக்கக் கூடாது மற்றவர்களுக்காக நீ காத்திருக்க வேண்டும்.

நீ சொந்தக் குரலில் தான் பேசவேண்டும்.

ஷூட்டிங்கில் "எனக்கு அது வேண்டும்.." இது வேண்டும்" என்று கேட்கக் கூடாது எப்போதும் உன்னிடம் பணம் வைத்துக் கொள். உனக்கு வேண்டியதை நீயே வாங்கிக் கொள்ளவேண்டும்.

சரியாக நடிக்கவில்லை என்று டைரக்டர் உன்னைத் திட்டும் போது உனக்குக் கோபம் வரக்கூடாது அதேபோல பாராட்டும்போது கர்வமும் வரக்கூடாது இரண்டையும் சமமாகக் கருதவேண்டும்.

இப்படி அவர் தனது மகன் முரளிக்கு அறிவுரை கூறியுள்ளார்.

தினசரி சினிமா

தெல்லிப்பளை ஆஸ்பத்திரியை முதல்தர ஆஸ்பத்திரியாக இயங்க வைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 6

புற்று நோய்ச் சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்து தெல்லிப்பளை ஆஸ்பத்திரியை முதல்தர வைத்திய நிறுவனமாக இயங்க வைக்க, புதிய ஆஸ்பத்திரிக் கமிட்டி உறுதி அளித்து உள்ளது.

கமிட்டியின் சார்பில் அதன் தலைவர் திரு. இ. சபாரத்தினம் வெளியிட்ட அறிக்கையில் இந்த உறுதி மொழி கூறப்பட்டுள்ளது.

மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் உதவி வைத்திய அதிகாரிகள், ஊழியர்களின் அயரா முயற்சியினால் ஆஸ்பத்திரி சேவைகள் அபிவிருத்தி அடைந்துள்ளது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

அமரர் விசுவலிங்கம் ஐயா

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர்

அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் .6

அமரர் விசுவலிங்கம் ஐயா அவர்கள் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர். குழந்தை உள்ளமும் எளிமையும் நேர்மையுமுடைய உத்தம புருஷர் விசுவலிங்கம் ஐயா அவர்கள்.

சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் தி. மாணிக்கவாசகர் இவ்வாறு கூறினர்

நல்லூர் இந்து இளைஞர் விடுதியில் நடைபெற்ற அமரர் க. விசுவலிங்கம் அவர்களின் அஞ்சலிக் கூட்டத்திலேயே அவர் பேசினார்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசுகையில்; ஐயாவின் மறைவு அவர்கள் குடும்பத்தினரை விட எங்களையே அதிகம் பாதித்துள்ளது, என்றார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தை தொடர்ந்தும் திறமையாக சிறப்பாக நடத்துவதே நாம் அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி, என்றும் கூறினார்.

பேராசிரியர் எஸ்.சண்முகநாதன் பேசுகையில்; அகதிகளாக உடைமைகளை இழந்து வந்தவர்கள், உணர்வுகளை இழக்காமல் அவர்களுக்கு: வாழ்க்கையில் ஒரு பிடிப்பை, தொடர்ந்து வாழும் நம்பிக்கையை ஊட்டியவர் அமரர் விசுவலிங்கம் ஐயா அவர்களே என்றார்.

யாழ் ஆணையாளர் திரு சி. வி. கே சிவஞானம் பேசுகையில்; அனுதாபத்தோடும், மனிதாபிமானத்தோடும் மக்களை மக்களாக மதித்து இந்த வயதிலும் மக்களை நாடிச் சென்று சேவையாற்றியவர் ஐயா அவர்கள்.

விமர்சகராக மட்டுமன்றி தானும் செய்து காட்டியவர் என்றார்.

சட்டத்தரணி திரு. ஆர். பாலசுப்பிரமணியம், யாழ் மறை மாவட்ட பேராயர் வந். ம. தியோகுப்பிள்ளை ஆண்டகை, மேலதிக அரசாங்க அதிபர் இ. இராமநாதன் ஆகியோரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

(இ-5)

இந்து ஆலயங்கள் பற்றிய விவரங்கள் நூல் வடிவம் பெறும்

பலாலி, ஜூன் 6

காங்கேசன் துறை கல்வி வட்டாரத்தில் உள்ள இந்துக்கோயில்கள் பற்றிய விவரங்களைத் தொகுத்து நூல் வடிவில் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

ஆலயவரலாறுகள் கோவில் அமைப்பு முறைகள், மூர்த்திகள், விழாக்கள், கிரியைகள்) வாகனங்கள் கலையம்ச, வள், கோயிலும் சமூகமும், ஆலயத்துடன் தொடர்பு உடைய சமய இலக்கிய முயற்சிகள் கோயில் சொத்துக்கள் என்பவற்றின் விவரங்களைச் சேகரிக்கும் முயற்சியாக விவரக் கொத்து ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக இந்து கலாசாரதுறைப் பேராசியர் திரு கோபாலகிருஷ்ணன், வரலாற்றுத்துறை பேராசிரியர் க. சிற்றம்பலம், தமிழ்துறை கலாநிதி நா சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் ஆலோசகர்களாக இருப்பர்.

(இ. ஒ 119)

வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 6

அட்டைப்பட ஓவியங்கள் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

டாக்டர் எம், கே. முருகானந்தன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, புதுவை இரத்தினதுரை, செங்கை ஆழியான், நந்தி, திருமதி பத்மா சோமகாந்தன் ஆகியோர் உரையாற்றுவார்கள்

(இ-9)

சித்ருபானந்தா மானிப்பாய் விஜயம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

தவத்திரு சித்ருபானந்தா சுவாமிகள் இன்று வெள்ளிக்கிழமை மானிப்பாய்க்கு விஜயம் செய்கிறார்.

சுவாமிஜியின் சிறப்புரைகள் இன்று காலை 8 30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் காலை 9.30 மணிக்கு மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியிலும் இடம்பெறும்.

திருநெல்வேலி இராம சிருஷ்ணாலயத்தின் சார்பில் இந்த நிகழ்ச்சிகள் இடம்பெறுவதாக அதன் அமைப்பாளர் இரா. மகேந்திரசிங்கம் தெரிவித்தார்.

சுவாமியின் மானிப்பாய் விஜயத்தை முன்னிட்டு நவாலி மகேஸ்வர அநாதைகள் இல்லத்தில் வதியும் குழந்தைகளுக்கு விசேட மதியபோசனம் வழங்கப்படவுள்ளது.

இல்லத்துக்கு சுவாமி காலை 10.45 மணியளவில் விஜயம் செய்வார். (-எ)

இரண்டாவது பிறந்த தின வாழ்த்து

செல்வன் உமேஷன் வினோதராஜ்

குருநகர், சென். ஜேம்ஸ் கிழக்கு வீதியைச் சேர்ந்த எடிசன்—மெடோனா தம்பதியரின் செல்வப் புதல்வன் உமேஷன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை தனதில்லத்தில் கொண்டாடுகிறார் இவரை அப்பா, அம்மா மற்றும் உற்றார்கள், உறவினர்கள் அர்ச். அந்தோனியார் நல்லாசியுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

மானிப்பாய் இந்து பவளவிழா: பழைய மாணவருக்கு கௌரவம்

மானிப்பாய், ஜூன் 6

இசை, விளையாட்டு, எழுத்துத் துறைகளில் சிறந்து விளங்கிய பழைய மாணவர்களை மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் அண்மையில் கௌரவித்தது.

கல்லூரியின் பவள விழாவை ஒட்டி இந்தக் கௌரவிப்பு நிகழ்ச்சி இடம் பெற்றது.

இணுவில் பிரம்ம ஸ்ரீ என். வீரமணி ஐயர், திரு. வி. கே. செல்வசுந்தரம், திரு ஏ. சுப்பிரமணியம், திரு. ஐ. சாந்தன் ஆகியோரே பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட பழைய மாணவராவர்.

இந்த நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் டாக்டர் என். சரவணபவானந்தன் தலைமை வகித்தார்.

இசை

நுண்கலைகளில் முதிர்ச்சி அடைந்தவர்களுக்கு இறைவனை அடையும் பக்குவநிலை ஏற்படுகிறது.

நுண்கலைகளில் சிறந்து விளங்கும் வீரமணி ஐயர் எமக்குக் கிடைத்த பொக்கிஷமாகும் — இப்படி திரு பி. செல்வரத்தினம் வீரமணி ஐயருக்கு பொன்னாடை போர்த்திப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. வீரமணி ஐயர் நன்றி தெரிவித்துப் பேசுகையில், "கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு எல்லாவற்றையும் அள்ளித் தருபவை கல்விக் கூடங்கள்தான்.

அவற்றை நாம் எந்நாளும் தெய்வமாகப் போற்றவேண்டும்'' என்றார்.

விளையாட்டுத்துறை

திரு. வி. கே. செல்வசுந்தரம், திரு. ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் காலத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டுத்துறையில் முன்னணி வகித்தது —

இப்படி திரு. சிவா. ராஜேந்திரன் தனது பாராட்டுரையில் சொன்னார்.

எழுத்து

இன்றைய பிரபல சிறுகதை எழுத்தாளர்களிடம் காணப்படாத முதிர்ச்சியை திரு. சாந்தனிடம் காணமுடிகிறது.

இப்படி முன்னாள் அதிபர் திரு. எஸ். ரி. சாரி தனது பாராட்டுரையில் குறிப்பிட்டார்.

திரு. சாந்தன் தனது நன்றியுரையில். "என்னை முழுமனிதனாக்கியது மானிப்பாய் இந்துக் கல்லூரியே'' — என்று குறிப்பிட்டார்.

(இ-எ-90

தேங்காய்எடுக்கச் சென்றோர்:

சைக்கிள் மட்டும் கண்டுபிடிப்பு

பவாலி, ஜூன் 6

தமது வயாவிளான் மடத்தடி வீட்டிற்குத் தேங்காய் எடுக்கச் சென்று காணாமற்போனவர்களான ச. சின்னத்தம்பி (32 வயது) திரு. கே வெள்ளிமலை (30 வயது) ஆகியோரின் சைக்கிள் அனாதரவாகக் கிடந்ததாக அறியப்படுகின்றது.

இவர்களைப்பற்றித் தமக்குஎதுவும் தெரியாதென இவர்களின் உறவினருக்கு இராணுவதரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளதாம். அவர்களது சைக்கிள்கள் கிடந்த இடத்தில் இரத்தம் வடிந்த அடையாளங்களும், இழுத்துச் சென்ற அடையாளங்களும் காணப்பட்டன என்று இவர்களது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

வயாவிளானில் மினிமுகாம் அமைக்கப்பட்டதை அடுத்து இவர்கள் அச்சுவேலி—செல்வநாயக புரத்துக்கு இடம் பெயர்ந்து இருந்தனர்.

(இ - 119)

கல்வி வள நிலையத்தில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 6

நல்லூர் வட்டாரப் பாடசாலைகளுக்கான அரங்கப்பயிற்சிக்கு, நாடகப் பயிற்சி வகுப்புக்களை ஞாயிறு தோறும் நல்லூர்க் கல்வி வள நிலையம் நடத்தி வருகிறது.

நாடக அரங்கக் கல்லூரியினரின் ஆதரவுடன் நடத்தப்படும் இப் பயிற்சி வகுப்புக்களில் நல்லூர் வட்டார ஆசிரியர்களுடன் மாணவரும் கலந்து கொள்கின்றனர்.

நெறியாளராக குழந்தை ம. சண்முகலிங்கம் பணியாற்றுகிறார் பிரபல நாடகக் கலைஞர்கள் பயிற்சி வகுப்புக்களை நடத்துகின்றனர்

[illegible] கல்வி அலுவரும் நல்[illegible] நிலையத் தலைவருமான திரு சு. சிவநாயகமூர்த்தி இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்.

களப் பயிற்சி, யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

பம்பாய் வெங்காய விதை

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத்தின் முயற்சியால் இறக்குமதி செய்யப்பட்ட விதை விவசாய அதிகாரிகளால் உத்தரவாதம் செய்யப்பட்டது. விஞ்ஞான முறைப்படி களஞ்சியப்படுத்தப்பட்டது. வெளிவந்த பயிர் திறமையாகவுள்ளது. சிறிய அளவு விதை கையிருப்பிலுள்ளது.

பெறுமிடம்,

ஸ்ரீமகள் ரேடர்ஸ்
158 ஆஸ்பத்திரி வீதி
(பெரிய கடை)
யாழ்ப்பாணம்
தொலைபேசி; 23572

'வெளிநாடு போகிறவர்களெல்லாம் ஏன் MCTயையே தேடிப் போகிறார்கள்?'

"இது தெரியாதா? MCT நீண்டகாலமாக நம்பிக்கையைச் சம்பாதித்த இடம். ஒழுங்குகளெல்லாம் அங்கே 'பட் பட்'டென்று முடிகின்றன.''

'MCT எங்கே இருக்கு?''

இது தெரியாதா? பெரியாஸ்பத்திரிக்கு கிழக்குப் புறத்தில் பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கையில்.''

dynads

உரும்பராய் இந்துக் கல்லூரி

பவள விழா

பொருட்காட்சி

எதிர்வரும் திங்கள் (9ஆம் திகதி) செவ்வாய் (10ஆம் திகதி) கிழமைகளில் உரும்பராய் இந்துக் கல்லூரியில் காலை 8.30) தொடக்கம் மாலை 5.30 வரை நடைபெற உள்ள பொருட்காட்சியில் பனம்பொருள் அபிவிருத்திச் சபை, மில்க்வைற், மனோகரன் அன்ட் வெற்றிவேல் J.C.C. ltc, டைனமிக் எஞ்ஜினியரிங் ltc, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ். மருத்துவபீடம், உரும்பராய் இந்து மாணவர், Silky Ice Cream Cool Bar, உட்பட பல அமைப்புகள் கலந்துகொள்கின்றன. மேலும் கலந்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் பொருட்காட்சிக் குழு அங்கத்தவர் S. K. மனோகரரூபனுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

S: K: மனோகரரூபன்
உரும்பராய் சந்தி.

கூலி ஆட்கள் தேவை

மன்னார் நீர் விநியோகத் திட்டத்தில் தண்ணீர்க் குழாய்கள் தாழ்ப்பதற்குத் தேவையான கிடங்குகள் வெட்டுவதற்கு

ஆட்கள் தேவை

தினக்கூலி அடிப்படையில் அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேலை கொடுக்கப்படும்.

அடம்பன், வங்காலை ஆகிய வேலைத்தளங்களில் இருக்குமிடவசதியும் செய்து கொடுக்கப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்;

பொறியியலாளர்,
மன்னார் நீர் விநியோகத் திட்டம்
சமுவேல் சன்ஸ் அன்ட் கொம்பனி லிமிட்டட்,
மன்னார்.

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் எமது யாழ்ப்பாணக் கிளைக் காரியாலயத்தினூடாகத் தொடர்புகொள்ளவும்.

உதய சங்கற்பம்

வாழ்க்கை என்பது ஒரு நாடகம். இந்த நாடகத்தில் உன்னுடைய பங்கை நன்றாக நடி. நீ நல்லவனாக இருந்தால், இந்த உலகம் முழுவதும் உனக்கு நல்லதாக இருக்கும்.

-சுவாமிவிவேகானந்தர்

உதயன்
உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

இல. 15 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
06 06-86
தொலைபேசி 24805
22078
த. பெ.28

நூலக சேவையும் அறிவு விருத்தியும்

அறிவுக் களஞ்சியமாக விளங்கிய யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. எனினும் அதன் சேவை குன்றாதிருப்பதற்காக 1984 இல் அது புனரமைக்கப்பட்டது.

ஆயினும் அதனைப் பயன்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. கோட்டையில் இராணுவ முகாம் அமைந்திருப்பதால், பாதுகாப்பு வலயம் பிரகடனப் படுத்தப்பட்டதால் நூல் நிலையக் கட்டடத்தைச் சிறிதளவேனும் பாவிக்க முடியாத நிலை தோன்றியது.

எனினும் நூலக சேவை மாற்று ஏற்பாடுகளுடன் நடந்து வருகிறது. யாழ். நகர மக்கள் பூரண நூலக சேவையைப் பெற முடியாவிடினும் திருப்தியான சேவையைப் பெறுகிறார்கள் என்று சொல்லலாம்.

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதன் ஞாபகார்த்த தினத்தை ஒட்டி கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அங்கு தெரிவிக்கப்பட்ட இரண்டு கருத்துகள் மனதிற் கொள்ளப்பட வேண்டியவை.

நூலக இயக்கம் யாழ் மாநகரத்தில் மட்டுமன்றி, யாழ் மாவட்டம், வடமாகாணம், கிழக்கு மாகாணம் என்ற மட்டத்துக்கு விரிவடைய வேண்டும். அது ஒரு சமூக ஆக்கச் செயற்பாடாக மலர வேண்டும். இவ்வாறு கல்விமானான திரு. கு. நேசையா தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களின் அரிய சொத்துக் கல்வி. கல்வி வளர்ச்சிக்கும், அறிவு விருத்திக்கும் நூல் நிலையங்கள் இன்றியமையாதவை.

அச்சுக் கூலியும், நூல்களின் விலையும் உயர்ந்து வரும் இக்காலத்தில் நூலக சேவை விரிவடைய வேண்டும். கிராமங்களிலும், பட்டி தொட்டிகளிலும் உள்ளவர்கள் கூட அரிய நூல்களைப் படிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

அரசாங்கம் அதனைச் செய்யும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கு இல்லை.

சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கல்வி நிலையங்கள் ஆகியவை தமது சொந்த முயற்சியில் நூலக சேவையை விரிவு படுத்த வேண்டும். அதற்கான ஆக்க பூர்வமான செயல் திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டும்.

நடமாடும் நூலக சேவையை நகரங்களில் மட்டுமன்றி, கிராமங்களிலும் நடத்த வேண்டும். பண வசதி குறைந்த பிள்ளைகளின் நன்மை கருதி இலவச சேவையை நடத்துவதும் வரவேற்கத்தக்கது.

கருத்தரங்கில் உரையாற்றிய திருமதி கு. பரராஜசிங்கத்தின் கருத்தும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்.

வானொலி, தொலைக்காட்சி ஆகியவை காரணமாக எமது மக்களிடையே வாசிப்புப் பழக்கம் மந்தநிலை அடைந்திருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

இப்போது, கல்வியை வெறும் பரீட்சைக் குறியாகக் கொள்கிறார்கள்.

அறிவை விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கம் சிறிதும் இல்லை. இடைவெளி நிரப்பி கேள்விக்கு கோடு கீறிப் பரீட்சையைச் சித்தி அடைந்து விட்டால் போதும் என்று எண்ணுகிறார்கள்

மொத்தத்தில் கல்வித்தரம் பாழ்பட்டு வருகிறது. அதாவது அறிவு வளர்ச்சிக்கு ஒவ்வாத கல்விமுறை நடைமுறைக்கு வந்திருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் மாணவர்கள் துணை நூல்களை வாசித்தால்தான் அறிவை ஓரளவாவது தேடிக் கொள்ளலாம் என்ற நிலை உருவாகியுள்ளது.

ஆனால் எமது மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மிகக்குறைவு. சந்ததி இடைவெளி போல, நூல்களை வாசிப்பது, அறிவைப் பெருக்குவது ஆகியவற்றிலும் பெரும் இடைவெளி உண்டு

இது தவிர்க்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு வாசிப்பின் அருமையை உணர்த்த வேண்டும். அவர்களை வாசிக்கத் தூண்ட வேண்டும்.

மாணவரினதும், மற்றையோரதும் வாசிப்புத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக ஒருங்கிணைந்த நூலக சேவைத் திட்டம் ஒன்று தமிழ்ப் பகுதிகளுக்கென தனியாகத் தயாரிக்கப் பட்டு, சரிவர நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

தபால்கள் யாழ் வந்தன

புங்குடுதீவு, ஜூன்.6

இரு வாரங்களின் பின்னர் முதல் தடவையாக புங்குடுதீவிலிருந்து தபால்கள் யாழ்ப்பாணம் பிரதம தபால் காரியாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

புங்குடுதீவு தபால்நிலையத்தில் கடந்த மாதம் 17 ஆம் திகதி முதல் தேங்கிக் கிடந்த தபால்களே கடந்த திங்கட்கிழமை காலை அராலித் துறைமுகம் வழியாக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

புங்குடுதீவு தபால் நிலைய ஊழியர்கள் இத் தபால்களை நேரடியாகக் கொண்டு சென்று ஒப்படைத்தனர்.

அதே சமயம் புங்குடுதீவுக்கு வந்த தபாற் பொதிகளையும் ஊழியர்கள் கையேற்று புங்குடுதீவு கொண்டு வந்து சேர்த்தனர்.

கடந்த இரு வாரங்களின் பின்னர் வெளியூர் தபால்கள் இம்மாதம் 4 ஆம் திகதி முதல் இங்கு விநியோகிக்கப் படுகின்றன.

அக்கியூனோ 100ஆவதுநாள் கொண்டாடுகிறார்

மணிலா, ஜூன் 5

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி கொறாசன் அக்கியூனோ தான் பதவிக்கு வந்த 100 ஆவது நாளை இன்று கொண்டாடுகிறார்.

மக்கள் மத்தியில் செல்வாக்குடன் விளங்கும் ஜனாதிபதியாக இருப்பது அவருக்கு பெரும் மகிழ்ச்சி அளித்துள்ளதாக பிலிப்பீன்ஸ் செய்திகள் தெரிவித்தன

மார்க்கோஸின் 20 ஆண்டுகால குடும்ப ஆதிக்க ஆட்சியை மக்கள் சக்தியின் துணையுடன் தூக்கி எறிந்த துணிவுள்ள பெண்மணி கொறாசன் என அந்த செய்திகள் மேலும் தெரிவித்தன

“பிலிப்பீன்ஸில் சீரழிந்து போயிருந்த பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப கொறாசன் முயன்று வெற்றி கண்டு வருகிறார்.

கொம்யூனிஸ்ட் கெரில்லாக்களின் எதிர்ப்புகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை என்பது உண்மைதான்.

எனினும் மார்க்கோஸ் காலத்தில் இருந்ததை விட மோசமான அளவுக்கு நெருக்கடிகள் கம்யூனிஸ்ட் கெரில்லா கெடுபிடிகள் முற்றியுள்ளதாகக் கருத முடியாது.

மார்க்கோஸின் இராணுவ ஆதிக்க அரசியல் அமைப்பை இல்லாமற் செய்து விட்டு புதிய இடைக்கால அரசியல் அமைப்பை அவர் அறிமுகப்படுத்தியது பிலிப்பீன்ஸ் அரசியல் மாற்றத்தை உத்தரவாதப் படுத்தி உள்ளது.

இவ்வாறு கொறாசன் அக்கியூனோவின் அரசு பற்றி பி. பி. சி. செய்தி விமர்சனங்களில் தெரிவிக்கப்பட்டது (ஐ)

கேரளத்தில புதிய மந்திரிகள்

திருவனந்தபுரம், ஜூன்5

கேரளமாநில அமைச்சரவையில் இன்று புதிய மந்திரிகள் இருவர் பதவி ஏற்றுள்ளனர்.

திரு தட்ஷன் பிரபாகரன், திரு ரமேஷ் செந்தரை ஆகியஇருவருமே அந்த இரு அமைச்சர்கள். (ஐ)

பொற்கோயிலுக்குள் பொலீஸ் புகுந்தது

பாதுகாப்புப் பணியாளர் கொலையை அடுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கை

அமிர்தசரஸ், ஜூன் 5

பஞ்சாப்பில் அமிர்தசரஸ் பொற்கோயிலை பொலீஸார் மீண்டும் முற்றுகையிட்டுள்ளனர்.

பொற்கோயிலில் பாதுகாப்புக் கடமையிலிருந்த ஒருவரை சீக்கிய தீவிரவாதிகள் கொலை செய்ததை அடுத்தே பொலீஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கோயிலின் குருத்துவார் பிரபந்த குழுவின் வேண்டுகோளை அடுத்தே இவ்வாறு மேற்கொள்ளப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

200க்கும் மேற்பட்ட சீக்கிய தீவிரவாதிகளான ஆண்களும் பெண்களும் பொற் கோயிலுக்குள் புகுந்து குருத்துவார் பிரபந்த குழுவை பணிய வைக்க முயன்றனர்.

பாதுகாப்பு பாணியிலிருந்தவர்களையும் அவர்தாம் மேலும் தாக்கிய போது பலர் காயம் அடைந்துள்ளனர்.

பொலீஸார் பொற்கோயிலுக்குள் இருந்து இவர்களைக் கலைத்து விட்டதாகவும் 130 தீவிரவாதிகளைக் கைது செய்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே 3000 துக்கும் மேற்பட்ட சீக்கியர்கள் பொற்கோயிலுக்கு வெளியே ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

1984ஆம் ஆண்டு பொற்கோயிலை பாரத இராணுவம் முற்றுகை இட்டதற்கு எதிரான நினைவு கூரல் நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டது.

அகில இந்திய சீக்கிய மாணவர் சம்மேளனமும் வேறு தீவிரவாத பிரிவுகளும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது

“பர்னலாவே பதவி விலகு”,

“பஞ்சாப்புக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும்”,

“சீக்கியர்களின் இறுதி இலட்சியம் காலிஸ்தானே.’ போன்ற’ சுலோகங்கள் ஊர்வலத்தில் ஆவேசமாக கோஷிக்கப்பட்டன.

வாள்களைச் சுழற்றிய படி அவர்கள் நடந்து சென்றதாகச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

வெளி உலகில்

ஹரியாணா முதல்வர் பதவி விலகினார்

புதிய முதலமைச்சராக பன்சிலால் தெரிவு

சண்டிகார், ஜூன் 5

ஹரியாணா முதலமைச்சர் பஜன்லால் பதவி விலகிவிட்டார். இதையடுத்து மாநில போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த பன்சிலால் முதலமைச்சராகப் பதவி ஏற்கிறார்.

பஜன்லாலின் பதவி விலகற் கடிதம் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது

பதவி விலகலுக்கான காரணம் தமது சொந்த விருப்பமே என பஜன்லால் தெரிவித்துள்ளார்

“பஞ்சாப் உடன்படிக்கையின்படி எதிர்வரும் 21ஆம் திகதி சண்டிகார் பஞ்சாப்புக்குக் கையளிக்கப்பட இருக்கிறது இது தொடர்பான கருத்து முரண்பாடே இவரது பதவி விலகலுக்குக் காரணம்”

இவ்வாறு பொதுவாகக் கருதப்படுகிறது.

பன்சிலால் பொறுப்பிலிருந்த போக்குவரத்துத்துறை அமைச்சை பிரதமர் ராஜீவ் பொறுப்பேற்றுள்ளார்.

பஞ்சாப் ஹரியாணா விவகாரம் தொடர்பாக தொடர்ந்து பல மாற்றங்கள் நிகழலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

உலக சுற்றுடல தினம்: ராஜீவின் கோரிக்கை

புதுடில்லி, ஜூன் 5

இயற்கையையும் சுற்றுப்புற சூழல்களையும் பேணிக்காக்க வேண்டும். இதற்கு உலக இயக்கம் உருவாக்கவேண்டும்.

இவ்வாறு பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி விருப்பம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி சக்தீஸ் தலத்தில் உலக சுற்றுடல் தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் உரையாற்றினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

இயற்கைத் துன்பங்களிலிருந்து மனிதரைக் காக்க சுற்றுச் சூழல் நலம் பேணப்பட வேண்டும் என மேலும் கேட்டுக்கொண்டார்.

உலக நாடுகள் எங்கும் சுற்றுடல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. (ஐ)

பொய்யாமொழி

குறள்:

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடியொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

பொருள்:

நடுவு நிலைமை இல்லாமல் பிறர்க்குரிய நல்ல பொருளை ஒருவன் கவர விரும்பினால், அவனுடைய குடியும் கெட்டுக் குற்றமும் அப்பொழுதே வந்து சேரும்.

சிவயோகக்குரு நெறிகண்டவர் கைதடி மார்க்கண்டு சுவாமிகள்

இன்று மார்க்கண்டுச் சுவாமிகள் தினம் ஆகும். இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

அல்லல் ஏற்படும் போது ஆண்டவனை அருட் பாடல்களை ஓதி ஆறுதல் தரும் வண்ணம் வேண்டுதல் செய்வது அனைத்துச் சமயங்களினதும் பொதுப்பண்பு.

ஈழத்துச் சைவர்கள் திருமுறைகளை ஓதுதல், கோயில் வழிபாடு செய்தல் ஆகியவற்றைக் கடைப் பிடிக்கின்றார்கள். தம்மைக் கடைத்தேற்றிய ஞான குரவர்களையும் வழிபடுகின்றனர்.

இந்த வகையில் அகில உலகப் பிரசித்தி பெற்றுள்ள சிவயோக சுவாமிகளையும் அவர் அருளிய நற்சிந்தனை என்னும் நூற் பாடல்களையும் பலர் ஓதி வருகின்றனர்.

நற்சிந்தனைப் பாடல்களையே தம்மை நாடிவரும் அன்பர்களுக்கு அருள் உபதேசமாக வழங்கிய பெருமைக்குரிய மகானாக விளங்கியவரே கைதடியூர் மார்க்கண்டுச் சுவாமிகள்.

இவர் பிறப்பிடம் பிராண்பற்று 1899 இல் தோன்றினார். 1984 இல் மகாசமாதி அடைந்தார். 1938இல் யோக சுவாமிகள் ஆரம்பித்த கைதடி ஆச்சிரமத்தில் 1950 முதல் 1984 வரை ஞானநிட்டை புரிந்தார்.

இவர் பற்றிய நூல் “குரு நெறி வழி” என்பது. இவர் போற்றிய நூல் உபதேசித்த நூல் நற்சிந்தனை எனும் திருவமுதம்.

தாம் புதிதாக ஒன்றையும் உபதேசிக்காமல் தம் ஞானகுரவர் திருவாக்கையே நல்லுபதேசமாக வழங்கிய இம்மகானின் வரலாறு ஈழத்து ஆன்மீக வரலாற்றிலே என்றும் நினைவுக்குரியதாகின்றது.

நமது பிரச்சினைகள் தீர — தீர்க்க ஞானி வழி—வழிபாடு உதவும் என்ற நம்பிக்கை நம்மவர் பலருக்கு இன்று இருக்கின்றது.

“நற்சிந்தனை அடியவன்”

இதனால் தினமும் நினைக்க வேண்டியவராக தொடர்புடையவராகச் சிவயோக சுவாமிகள் திகழ்கின்றார்.

அவரை நினைப்பவர்க்கு நற்சிந்தனைத் தொடர்பும் அதனைத் தினமும் கைதடி ஆச்சிரமத்தில் உபதேசித்த மார்க்கண்டுச்சுவாமிகள் நினைவும் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

யோக சுவாமிகளின் குருமூர்த்தி நல்லூர்ச் செல்லப்பாச் சுவாமிகள் அருளிய மகாவாக்கியங்களாகிய, “எப்பவோ முடிந்த காரியம், யாம் ஒன்றும் அறியோம், முழுதும் உண்மை, ஆர் அறிவார், ஒரு பொல்லாப்புமில்லை” முதலியனவும் வந்துகொண்டே இருக்கும்.

இவற்றின் உட்பொருளை மெய்ப் [illegible] மீண்டும் மீண்டும் நற்சிந்தனையை [illegible] அதனை ஓதி உணர்ந்து வாழ்ந்து காட்டிய மார்க்கண்டுச் சுவாமிகளைச் சிந்தித்து வந்திப்பதுவோ நல்வழியாகப் புலனாகின்றது. மார்க்கண்டுச் சுவாமிகள் நினைவாக வெளிவந்த “குரு நெறி வழி” யில் குருநாதன் மார்க்கண்டுச் சுவாமிகளுக்கு அருளிய மணி மொழிகள் காணப்படுகின்றன. அவற்றுட் சிலவற்றை இன்றைய சிந்தனையாக — இக்காலகட்டச் சிந்தனையாக இங்குத் தருகின்றோம்.

சுகமும் துக்கமும் இரட்டைப் பிள்ளைகள்.

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தெய்வம்.

இன்ப துன்பமெல்லாம் முகிலைப்போல் வந்து போகட்டும்.

காஞ்சிரங் கொட்டையும் தேவைக்கு உதவுகின்றது. அதுபோல் எல்லோரும் நல்லவர்கள்தான்.

எங்களுக்குள்ளே தான் சுயராச்சியம். எவ்வளவு போர் புரியவேண்டும்.

தன்னைத் திருத்தாது யாத்திரைக்குப் போவதனாலாவதென்ன?

என்ன வந்தாலும் பொறுக்கக் கூடிய திறமை வேண்டும்.

மல்லிகைப் பந்தல

யாழ்ப்பாணம்,ஜூன் 6

'மல்லிகைப் பந்தல்' நிகழ்ச்சி நல்லூர் இந்து விடுதியில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற உள்ளது

35 பேருமன்னர்களைப் [illegible] தகவல்கள், குறிப்புகள் [illegible] ஓவியங்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா அன்று இடம்பெறுகிறது.

டாக்டர் எம். கே. முருகானந்தன் நிகழ்ச்சிக்கு தலைமை வகிப்பார். புதுவை இரத்தினதுரை வரவேற்புரை நிகழ்த்த பேராசிரியர் கா. சிவத்தம்பி வெளியீட்டுரை நிகழ்த்துவார். (-எ)

இந்திய வெளிநாட்டு கொள்கையில் நிச்சயமற்ற நிலை

குழம்பிய நிலையில் இலங்கைப் பிரச்சினை — என்ற தலைப்பில் மாலினி பார்த்தசாரதி ‘புரொண்ட்லைன்’ சஞ்சிகையில் (மே 17—30) கட்டுரை ஒன்று எழுதியிருந்தார்.

அக் கட்டுரையின் ஒரு பகுதியின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது:

பாகிஸ்தான் சுமார் 1,600 இலங்கைச் சிப்பாய்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

புலனாய்வுப் பயிற்சி வழங்கும் இஸ்ரவேலியர் அணுகுமுறையில் முரட்டுத்தனமான போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.

துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களை ஓட்டுவதில் பிரிட்டிஷ் கூலிப்படைகள் ஈடுபட்டுள்ளன;

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குண்டுவீச்சுக்கள் நடத்துவதற்கும் அவர்கள் தலைமை வகிக்கின்றனர்.

இராணுவச் செலவு அதிகரித்து வருகின்றது இதனால் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்க முடியாத அளவுக்கு நாட்டின் நிதி நிலைமை உள்ளது.

யுத்தத்துக்குச் செலவிடுவதற்காக அபிவிருத்தித்திட்டங்கள் நிறுத்தப்படுகின்றன என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவே ஏற்றுக் கொண்டு விட்டார்.

400 கோடிரூபா கடனை இந்த ஆண்டில் பெற வேண்டுமானால் நாட்டின் பொருளாதார நிலையைச் சீராக்கும்படி சர்வதேச நாணயச்சபை இலங்கைக்குக் கூறிவிட்டது.

உலக வங்கி வழங்க இருந்த 500 கோடிரூபா கடனையும் இலங்கை, தற்போதைய நிலை காரணமாக இழந்துவிட்டது.

நிதி அமைச்சர் ரொனி டி மெல், இலங்கைக்கு உதவும் நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பிரயாணத்தின் முடிவில் மேற்கண்ட தகவல்களைத் தான் கொண்டு வந்தார்

இலங்கை நிலைமையை மேலும் குழப்பக்கூடிய இந்திய வெளிநாட்டுக் கொள்கை அமைப்பில் நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது.

பலிராம் பகத் நீக்கப்பட்டு வெளியுறவுஅமைச்சராக பி. சிவ்சங்கர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தநிலை.

இந்தியாவின் பங்கு உணர்ச்சி பூர்வமான நிலையை அடைந்துள்ள கட்டத்தில் அமைச்சர் பலிராம் பகத் நீக்கப்பட்டது எல்லாருக்கும்,குறிப்பாக தமிழருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது

இந்தியாவின் பங்கில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே அந்த ஆச்சரியம்.

பகத்தின் நீக்கம், கொழும்புக்கு என்ன தகவலை தெரிவித்துள்ளது?

இலங்கை அரச படைகளின் வல்செயலில் இனக்கொலையின் அம்சங்கள் தெரிவதாக திரு. பகத் பெப்ரவரி 26இல் டில்லி நாடாளுமன்றத்தில் பேசுகையில் சொன்னார்.

அது கொழும்பு அரசு, அரசியல் வட்டாரங்களில் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

சிதம்பரம் குழு மூலம் அனுப்பப்பட்ட யோசனைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருப்பதாக பிரதமர் ராஜீவ் காந்தி சொன்னார்

ஆனால் புதுடில்லி நாடாளுமன்றத்தில் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்ட இந்திய அரசின் பதிலில் வேறுதொனி காணப்பட்டது.

“அதிகாரப் பரவலாக்கல். காணிக் கொள்கை ஆகிய துறைகளில் சில மாற்றங்கள் தென்பட்டாலும் புதிய யோசனைகளில் பல சிக்கலான இடைவெளிகள் இருக்கின்றன.

“தமிழர் அதிக அக்கறை காட்டும் வடக்கு கிழக்கு இணைப்புச் சட்டம் ஒழுங்கு ஆகியவை குறித்தே இந்த இடைவெளிகள் ’—

இப்படி எழுத்து மூலமான பதிலில் இந்தியா கூறியிருந்தது.

இந்த நிலையற்ற தன்மையான சூழ்நிலையில் கொழும்பில் இருந்து இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின கொண்டு வந்த இடைவெளியைநிரப்பும் யோசனைகள் இடைவெளியை நிரப்புவதாகக் காணப்படவில்லை

இந்தியாவின் அனுதாபம் தமிழர்களுக்கு உண்டு என்று புதிய வெளிவிவகார அமைச்சர் சிவ்சங்கர் நாடாளுமன்றத்தில் தெளிவாகக் குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் பத்திரிகைக்கு திரு. ஜெயவர்த்தன அளித்த பேட்டி “பொறுமை யிழந்ததும் பொறுப் பற்றதுமாகும்” அந்த மனிதர் தனது நிலையை இழந்து விட்டார்”—என்று திரு.சிவ்சங்கர் கூறினார்.

தமிழ்த் தலைவர்களுக்கு சமர்ப்பிப்பதற்கு முதல் இலங்கை அரசின் யோசனைகள் தனக்கு திருப்தி அளிக்கின்றனவா என்பதை இந்தியா உறுதி செய்ய வேண்டியுள்ளது என்றும் திரு சிவ்சங்கர் சொன்னார்.

அர்த்தமற்ற பேச்சல்ல என்ற இந்தியாவின் கடும் போக்கை கொழும்புக்கு அறிவிப்பதாக இப்பேச்சு அமைந்திருப்பதாக கருதப்படுகிறது.

(முற்றும்)

பாதுகாப்பான சூழலில்
ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி நேர
சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
ஆர். ஜி. கட்டடம், ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்

உதயன்

06 06 1986 வெள்ளி-கிழமை

யாழ். நகரிலே ஆறு ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி முழுமையாக
ரெலிபோன் சேவையிலேயே
கண்ணும் கருத்தும் உள்ள
ஒரே ஒரு நிறுவனம்.
ரெலிகுளோப்
ரெலி குளோப் ரெலிபோன்: 25088
ஆறு சமாந்தர லைன்கள் கொண்டது

இனப்பிரச்சினைக்கு அவசர தீர்வு காண ராஜீவ் உதவ வேண்டும்

மாவட்ட அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 6 அணிசேரா இயக்கத்தின் தலைவர்என்ற முறையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை இனப் பிரச்சினைக்கு அவசர தீர்வு ஒன்றைக்காண உதவ முன்வரவேண்டும்.

மேற்கண்டவாறு கொலன்னாவை எம்.பியும் கொழும்பு மாவட்ட அமைச்சருமான திரு. வீரசிங்க மல்லிமாராச்சி நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையின் இன்றைய சூழ்நிலை பற்றி நேற்று நாடாளுமன்றம் விசேடமாகக் கூடி விவாதித்தது.

அச்சமயமே திரு மல்லிமாராச்சி இவ்வேண்டுகோளை விடுத்தார்

அமைச்சர் காமினி திஸநாயக்கா பேசுகையில் சொன்னதாவது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பதற்ற நிலையை நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்படுத்தவே தீவிரவாதிகள் முயற்சி செய்கின்றனர். அதன்மூலம் இராணுவத்தினரின் கவனத்தை திசைதிருப்பி, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தங்கள் நிலையை உறுதிப்படுத்துவதே தீவிரவாதிகளின் நோக்கமாகும்

இந்திய மத்தியஸ்த முயற்சியை முறியடிப்பதும் தீவிரவாதிகளின் இன்னொருநோக்கமாகும்

இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா சொன்னார்.

பத்தேகம எம் பி. திரு அமரசிறி தொடங்கொட பேசுகையில்:—

''மக்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் தவறிவிட்டது. தீவிரவாதிகள் முரண்பட்ட கொள்கைகளுடன் தான் இயங்குகின்றனர்'' என்று சொன்னார்,

மத்துகம எம் பி அனில் முனசிங்க பேசுகையில்—

சிங்களமக்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாகிவிட்டனர் என்றார்

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா பேசுகையில், பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்பில் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் உடனடியாக மூடுமாறு கோரினார்.

மதவாச்சி உறுப்பினர் திரு.மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில் —

அரசாங்கம் 16 நாடுகளிடமிருந்து ஆயுத உதவியைப் பெற்றுக் கொண்டபோதிலும் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த தவறிவிட்டது. நாட்டில் இரத்த வெள்ளம் பாய்கிறது.

அரசாங்கம் திறமையற்றதாகி விட்டதால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும்—என்றார்.

கொத்மலை எம் பி.ஆனந்த தஸநாயக்கா கொழும்பு மத்தி மூன்றுவதுஎம், பி. ஹலீம் இஷாக், போக்குவரத்து அமைச்சர் எம். எச். முகம்மது ஆகியோரும் பேசினார்கள்

(உ-எ)

காயப்பட்டவர் மரணமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 6 கடந்த திங்கட்கிழமை யாழ் நீதிமன்றத்திற்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான செல்லையா இராமலிங்கம் (வயது 55) நேற்று மரணமானார்.

நீதிமன்றத்திற்கு அலுவலாகச் சென்ற பொழுதே இவரைத் துப்பாக்கி ரவைகள் துளைத்தன.

இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி கனக. கேசவன் நடத்தினார்.

தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது (உ—10)

ஆர்ப்பாட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி) படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக் குழு ஒழுங்கு செய்திருந்தது.

நேற்றுக் காலை பத்து மணி அளவில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி யாழ் செயலகத்தில் முடிவடைந்தது.

பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களும், ஆண்களும் கொளுத்தும் வெயிலிலும் அரசுக்கெதிரான சுலோக அட்டைகளைத் தாங்கிச் சென்றனர்.

தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக் குழு, ஈழவர் முன்னணி, தேசிய மாணவர் மன்றம், இளைஞர் பொது மன்றம், மற்றும் பல பொது ஸ்தாபனங்களும் பாடசாலை மாணவர்களும் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணியின் இறுதியில் யாழ் செயலகத்தில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (உ- 10)

நடுவழி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி) கள் ஏனையோர் பெண்கள்

இதைத் தொடர்ந்து 4ஆம் கட்டைச்சந்தியில் வந்த பஸ் ஒன்று புதன் கிழமை மாலை விமானப் படைச் சிப்பாய்களினால் வழிமறிக்கப்பட்டது.

அதில் இருந்து 22 வரையிலான தமிழ்ப் பயணிகள் இறக்கப்பட்டு, பின்னர் ஊர்காவல்படையினரிடம் ஒப்படைக்கப் பட்டனர் என்றும்அதன் பின்னர் அவர்கள் பற்றிய தகவல் ஏதும்தெரியவில்லை என்றும் கூறப்படுகின்றது.

அதன்பின்னர் வந்த வான் ஒன்றும் மறிக்கப் பட்டது அதில் இருந்த 4 முதல் 6 வரையான தமிழ்ப்பயணிகள் இறக்கப்பட்டு ஊர்காவல் படையினரிடம் ஒப்படைக்கப் பட்டனராம். அதன்பின்னர்அவர்களைப் பற்றியும் தகவல் தெரியவில்லை

வியாழக்கிழமை கந்தளாயில் இருந்து திருமலை வந்து கொண்டிருந்த பஸ் ஒன்று 4 ஆம் கட்டைச்சந்தியில்மறிக்கப்பட்டது

அதில் இருந்த தமிழ்ப் பயணிகள் 15 பேர் வரையில் இறக்கப்பட்டு ஊர்காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதற்குப் பிறகு அவர்களைப்பற்றியும் தகவல் எதுவும் வெளிவரவில்லை

திருமலை நகரில்இதனால் பதற்றம் நிலவியது

மக்கள் நடமாடவே பயந்து வீடுகளில் தங்கியிருந்தனர்

திருமலை ஆஸ்பத்திரியில் தமிழ் ஊழியர் எவரும் நேற்று வேலைக்குச் செல்லவில்லை. பயம் காரணமாகவே அவர்கள் வேலைக்குச் செல்லவில்லை என்று கூறப்படுகிறது. (உ - எ)

கிளிநொச்சி முல்லைத்தீவுக்கு

உணவு அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம் ஜூன் 6 கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு போதிய உணவு வகைகள் அனுப்பி வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அந்தப் பகுதிகளுக்கான போக்குவரத்து சீரடைந்ததும் உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கு அனுப்பி வைக்கப்படும் என உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு சி பற்குணம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 100 தொன் மா முதலில் அனுப்பி வைக்கப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உணவு வகைகளை அனுப்பி வைக்க அந்தந்தப்பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பூநகரிக்கான உணவுவிநியோகம் சங்குப்பிட்டிக்கு ஊடாக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது

இதேவேளை ஆயிரம் தொன் கோதுமை மா இன்று காங்கேசன் துறைமுகத்திற்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

'மத்துறட்ட' என்ற கப்பல்மூலம் இந்த மா கொண்டு வரப்படுகிறது.

இதனால் வடபகுதிக்கான தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மற்றைய கப்பலான ''மேஸ் கொழும்பு' ஆயிரம் தொன் சீனியுடன் காங்கேசன் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

இக்கப்பல் எதிர்வரும் 8ஆம் திகதி காலை காங்கேசன் துறைமுகத்தை வந்தடையும். (உ-7)

கிளிநொச்சி குண்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி) மேலதிகப் பதிவாளர் ஒருவரும் கூடவந்தனர்.

புதன்கிழமை கிளிநொச்சியில் நடந்த சண்டையால் வாகனம் அன்று வவுனியாவில் தரித்து நின்றது.

பிரஸ்தாப வாகனம் கிளிநொச்சி விவசாயம்

எனினும் முல்லைத்தீவு வழியாக வாகனம் நேற்று கிளிநொச்சி வந்தடைந்தது.

பண்ணையை அண்மித்த சமயம் தூரத்தே பச்சை நிறமான வாகனம் ஒன்றைக்கண்டதும் வாகனச்சாரதி வாகனத்தை உடனடியாக நிறுத்தினார்.

'ஷெல்' தாக்குதல்

இதனையடுத்து கிளிநொச்சி முகாமில் இருந்து லொறியை நோக்கி 'ஷெல்' தாக்குதலும் பீரங்கித் தாக்குதலும் மேற்கொள்ளப் பட்டன.

இதேவேளை ஹெலிக்கொப்டர் விமானமும் மேலே பறந்துகொண்டிருந்தது.

உடனடியாக வாகனத்தில் இருந்த அனைவரையும் இறங்கி ஓடுமாறு சாரதிகளில் ஒருவர் பணித்தார்

லொறியில் இருந்த அனைவரும் இறங்கி அருகில் இருந்த பண்ணைக் குள்ளும், பற்றைகுள்ளும் பதுங்கிக்கொண்டனர்.

தொடர்ந்தும் வந்து கொண்டிருந்த 'ஷெல்' தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சாரதிகள் இருவரும்வாகனத்துக்குள் பதுங்கிக் கொண்டனர்.

குண்டு விழுந்தது

பாரிய சத்தத்துடன் பெரிய குண்டொன்று வாகனத்தின்மேல் விழுந்து வெடித்தது.

லொறி தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. லொறியில் இருந்த இரண்டு சாரதிகளும் எரியுண்டு மாண்டனர் என்றும் சாரதி ஒருவரின் கால் வீதியோரத்தில் கிடந்ததாகவும் இதனை நேரில்கண்ட ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதனால் நான்கு லட்ச ரூபா பெறுமதியான லொறியும் பல லட்சம் ரூபா பெறுமதியான உணவு முத்திரையும் எரிந்து நாசமாயின.

லொறித் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒருவர் செல்லையா கௌத்தமராசா (28 வயது) எனத் தெரியவந்துள்ளது.

இவர் திருமணம் முடித்து ஒன்றரைவருடங்கள் தான் முடிந்துள்ளது. இவருக்கு ஒரு குழந்தையும் உள்ளது.

மற்றவர் யாழ். செயலக அரசாங்க அதிபரின் வாகனச் சாரதி எனவும்தெரியவருகிறது. (அ-10)

உயிரை,

(1ம் பக்கத் தொடர்ச்சி) கத்தர்விடுதியில் இராணுவம் தங்கி இருப்பதாலும், கோட்டைமுகாமில் இருந்து அடிக்கடி 'ஷெல்' தாக்குதல் நடப்பதாலும் தொலைபேசித் திணைக்கள ஊழியர்கள் ஒழுங்காகக் கடமைக்குச் செல்ல முடியாமல் உள்ளனர் என்பது தெரிந்ததே.

தொலைபேசிப் பரிவர்த்தனை இயந்திரம் குளிர்சாதன வசதி பொருத்தப் பட்ட அறையில் இயங்குகின்றது. அந்த வசதி தொடர்ந்து இருந்தால்தான் தொலைபேசிச் சேவை சீராக இயங்கும்.

தினம் 3 மணித்தியாலங்களுக்கு அந்த வசதியை வழங்குவதும் சேவையை சீராக்கப் போதாது.

இப்படி தொலைத் தொடர்பு திணைக்கள வட்டாரங்கள் கூறுகின்றன.

(உ-எ-7)

காணவில்லை

எனது மகன் கந்தசாமி திருவானந்தன் என்பவரைக் கடந்த 21-05-86 காலை 6.00மணி தொடக்கம் காணவில்லை இவரைக் காணாததால் தாயார் மிகுந்த சுகயீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரைப்பற்றி தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக மூ. ஆறுமுகம் மானிப்பாய் வடக்கு(மருதடிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகாமை) மானிப்பாய் என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.

தகவல்:-
கா. கந்தசாமி

செங்கலடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) உயிரிழந்தார்.

அதைக் கண்ட வைத்தியசாலை பொறுப்பு அதிகாரி டாக்டர் சி. கே. சிவலிங்கம் விடுதிக்குள் செல்ல முயற்சித்தார். அந்த நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது. டாக்டர் சிவலிங்கம் மயிரிழையில் உயிர்தப்பினார். பின்னர் சிருடையினரால் அவர் தாக்கப்பட்டார்.

அம்புலன்ஸ் மூலம் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு டாக்டர் சிவலிங்கம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சேர்க்கப் பட்டார்.

டாக்டர் சிவலிங்கம் திருநெல்வேலி வாசி. வயது 54.

பலியான இளைஞனின் பெயர் இளையதம்பி கோபாலன், வயது 24.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, நோயாளர்கள் ஊழியர்கள் வைத்தியசாலையை விட்டு வெளியேறினர். அதைத் தொடர்ந்து வைத்தியசாலை மூடப்பட்டது

பின்னர் வந்தாறுமூலைச் சந்தியிலும் சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். முத்தையா தங்கராசா (வயது 23) என்ற வந்தாறுமூலை வாசி இச் சம்பவத்தில் பலியானார்.

2300---

(1ம் பக்கத் தொடர்ச்சி) வைக்கப்பட்டுள்ள தமிழர்களில் 5பேர் பெண்கள்.

பெண்கள் அனைவரும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் வைக்கப் பட்டுள்ளனர்.

சிறை வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் விவரம் வருமாறு:

✱ பூசா தடுப்பு முகாம்: 1,900
✱ வெலிக்கடைச் சிறை: 347
✱ போகம்பரை சிறை: 48
✱ நீர்கொழும்புச்சிறை: 5 (உ-எ-1)

விளையாட்டரங்கு

யாழ்ப்பாண பாடசாலை கிரிக்கெட்

சுற்றுப்போட்டி நாளை ஆரம்பம்

15, 17 வயதுப் பிரிவு அணிகள் மோதும்

—அலுவலக விளையாட்டுச் செய்தியாளர்—

யாழ்ப்பாணம், ஜூன் 6 யாழ் மாவட்டப் பாடசாலைகளின் 17-15 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிகளுக் கிடையிலான சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் இந்தச் சுற்றுப் போட்டி நடத்தப்படுகிறது.

இந்தச் சுற்றுப்போட்டிக்காக இரு வயதெல்லைப் பிரிவுகளிலும் உள்ள அணிகள் இரண்டு நிரைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

15 வயதுப் பிரிவு

15 வயதுக்குரிய அணிகளின் 'ஏ' நிரையில் கொக்குவில் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகியனவும்—

'பி' நிரையில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி ஆகியனவும் இடம்பெறுகின்றன.

நாளை நடைபெறும் போட்டிகளில்—

சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிகள் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும்—

கொக்குவில் இந்து மைதானத்தில் கொக்குவில் இந்து, யாழ். மத்திய கல்லூரி அணிகளும் மோதும்.

17 வயதுப் பிரிவு

17 வயதுப் பிரிவிற்கான அணிகளின் 'ஏ' நிரையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி ஆகியவையும்—

'பி' நிரையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியனவும் இடம்பெறுகின்றன.

நாளை நடைபெறும் போட்டிகளில் —

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் யாழ் மத்திய கல்லூரி, யூனியன் கல்லூரி அணிகளும்—

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் மகாஜனக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அணிகளும்-

சென்ஜோன்ஸ்கல்லூரி மைதானத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி அணிகளும்-

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி அணிகளும் மோதும். (உ-7)

இன்று விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 6 நல்லூர் ஸ்தான சாதனா பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று வெள்ளி காலை 8-30 மணிக்கு பாடசாலையின் அதிபர் திருமதி பத்மா சோமகாந்தன் தலைமையில் நடைபெறும்

பிரதம விருந்தினராக வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி பங்குபற்றுகிறார். (உ-7)

விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6 சில்வர் ஸ்ரார்ஸ் சுற்றுக் கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்கந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குகொள்ளும் அணிகள் 8 ஆம் திகதி குழுக்களாகப் பிரிக்கப்படும். (உ-7)

உடற்பயிற்சி போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 6 யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சி போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெற உள்ளன.

வட்டார நிலையில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட பாடசாலை அணிகள் இந்த மாவட்டப் போட்டியில் கலந்து கொள்ளும்.

மாவட்ட நிலையிலான போட்டிகள் யாவும் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என வட்டாரக் கல்வி அதிகாரி (உடற் கல்வி) திரு. வி கணேசலிங்கம் தெரிவித்தார். (உ-7)

அர்ஜுன ரணதுங்க காயமடைந்தார்

கொழும்பு, ஜூன் 6 பிரபல கிரிக்கட் வீரர் அர்ஜுன ரணதுங்க விபத்தில் சிக்கி காயமடைந்தார்.

ராஜகிரியாவில் புதன் இரவு இவ்விபத்து இடம் பெற்றது.

கொழும்பு ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். (உ-எ-2)

2ஆவது நாளாக---

(1ம் பக்கத் தொடர்ச்சி) தாகவும் தெரியவருகிறது

நேற்று கிளிநொச்சி முகாம் பக்கத்திலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டினால் கிராமசேவகர் ஒருவர் உயிரிழந்தார் பல வீடுகள் சேதமடைந்தன

உருத்திரபுரம் பகுதியில் பொம்மர்கள், விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றிலிருந்து குண்டுகள்வீசப்பட்டன வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திற்கு அருகே குண்டுகள் வீசப்பட்ட போதிலும் பாடசாலைக்கு பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அருகிலிருந்த சில வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகின,

கிளிநொச்சிப் பகுதியில் காயமடைந்த 4 பேர் பெரும் சிரமத்திற்கு மத்தியில் நேற்று மாலை யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர்.

திருநகரைச் சேர்ந்த கே. சரோஜா (29வயது) கே. ரவிச்சந்திரன் (16 வயது)—

உருத்திரபுர மகா வித்தியாலய ஆசிரியர் சீதா பொன்கலன் (வயது 52)-

குஞ்சுப்பரந்தனைச் சேர்ந்த சுவானி யுகம் பராசா (37 வயது) ஆகியோரே மேற்படி நால்வருமாவர். (அ-உ-10)

காரைதீவில் 10 இளைஞர் கைது!

காரைதீவுக் கிராமத்தில் பத்துத் தமிழ் இளைஞர்களை அக்கரைப்பற்று அதிரடிப்படை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்தனர்.

காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தில் எட்டாம் நாள் சடங்கில் கலந்து கொண்ட தமிழ் இளைஞர்களே கைது செய்யப்பட்டனர்.

ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு சைக்கிள் ஆகியனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கொழும்பிலும் கல்வி பாழ்!

கொழும்பு, ஜூன் 6 கொழும்புப் பாடசாலைகளில் மாணவர் வரவு மிகமிகக் குறைவாக இருப்பதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன

சிங்களப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பத் தயங்குகிறார்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

குண்டுப் பார்சல் பீதியே இதற்குக் காரணமாகும்.

சுமார் 3,000 மாணவர் படிக்கும் கொழும்பு விசாகவித்தியாலயத்தில் நேற்று 113 மாணவர் மட்டுமே சமுகமளித்திருந்தனர். புதன்கிழமை 80 மாணவர் சமுகமளித்தனர். எல்லாப் பிரபல கல்லூரிகளிலும் இதே நிலைமைதான் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ - எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 6-06-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15 Second Lane, Power House Road, Jaffna. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number [illegible]